# புதிய விஷயங்கள்



M. Gowrithas

கவிதைக் கொரு கோவில் - நம்
கன்னித் தமிழ் தீபம்!
அவன் பாரதி போற்றி - அவன்
அடிகள் நலம் போற்றி!

கௌரிதாஸ்

# புதிய விஷயங்கள்



"தாய்மொழி தமிழே - எந்தன்
தனி மொழி முதலே வாழ்க"

கௌரிதாஸ்

காலவோட்டத்தின்
தவிர்க்க முடியாத
ஓர் இலக்கிய வடிவமாக
இது பிறப்பெடுத்திருக்கிறது.

பொது மக்களின்
இதய ஓட்டங்களை
அவர்களுக்கு எடுத்தளிப்பதற்காகவும்
பிறப்பெடுத்த
புதிய வடிவம் இது.

சொல்லெனும் அன்னத் சூரத்தனத்துக்குத்
தாண்டிவிட வேண்டும்; அதில்
சோதனைத் தீரமும் சாதனை வீரமும்
துள்ளி வரவேண்டும்.

—: ஆசிரியர் :—

# Berlin T.V
# ஒரு
# அன்பான வேண்டுகோள்



தமிழர்கள்

சுவடுகளை தெரியாமல்

சுட்டெரிக்கப்படும் கொடுமை
நாள் தோறும் - அங்கே
நாட்டியமாகுகையில்

இங்கே... இப்போதைய தேவை

பாட்டுக்குப் பாட்டுக்காரர்களின்

போட்டியோ - அல்லது

பழகிப்போன சினிமாத்
புலம்பல்களோ அல்ல!,

குறுகிய எண்ணங்களுக்குக்
குடை பிடிக்காதீர்கள்.

இன்று

உங்கள் கையில்

விளம்பர ஆயுதம் - அது

எங்கள் தமிழீழ விடுதலைக்கு

வெற்றி வாகை சூட

வழி வகை செய்யட்டும்.



# காத்திருக்கும் காலங்கள்!

எங்கேயோ
எனக்கென்று ஒருத்தி
பிறந்து தானே இருக்கிறாள்.

அழகுச் சிலை போல்.........!

எங்கேடி உள்ளாய்....?
என் முன் வாராயோ...?

எனதுள்ளம்
ஏங்கிக் கிடக்கிறதே!
கட்டழகி உன்னைக்
கண்டவுடன்
ஒரு கோடி
காதற்பா — நெஞ்சில்
நாளைப் பூத்திடுமே.



# கண்ணீரில் கன்னங்கள்?

நம்மவர்கள்
நாகரிகமடைந்து விட்டார்கள்
சில
இரவுப் 'Bar' களில்
அவர்கள்
மதுவின் அடிமைகள்!

சுதந்திரப்
பூமியில் அடிபடுவது
அவர்களின் சொந்த வாழ்க்கை.

# இதுவும் யோகம் தான்

ஒரு யானையின் மீது சவாரி செய்ய
ஒரு அணில் விரும்பியது.
சரி முதுகில் ஏறிக்கொள் என்றது யானை.
அணில் ஏறிக்கொண்டது.

யானை அதைச் சுமந்து செல்லும் போது
யானையின் தலையில் ஒரு தென்னை மட்டை விழுந்தது.
யானை ஒரு பிளிறு பிளிறியது.
உடனே அணில் கேட்டது
நான் முதுகில் இருக்கிறது வலிக்கிறதா? என்று

யானைக்கு அணில் ஒரு சுமையா?
ஆனாலும் அணிலுக்கு அப்படி ஒரு நினைவு.

தாழ்ந்தவர்கள் தங்களை உயர்வாகக் கருதும்போது
உயர்ந்தவர்கள் சிரித்துக் கொண்டே
ஒதுங்கிவிட வேண்டும்.

# இன்னும் ஒரு சுதந்திரப் போர்

சுதந்திரப் போர்
அங்கே தான்
நடப்பதாகப் பேசிக் கொள்கிறார்கள்,

இங்கேயும்
ஒரு சுதந்திரப் போர்.

பத்தாண்டுகள்....!.!...!

கிடைத்திருப்பதோ
சில அற்ப, சொற்ப சலுகைகள்,
முழுச் சுதந்திரத்திற்காய்
வேண்டிநிற்கிறோம்.

# சொர்க்கத்திற்கு விடுமுறை



திருமணம்
சொர்க்கத்தில்
நிச்சயிக்கப் படுகிறதாம்,
இங்கே...!...!...!

திருமணம் செய்யாமல்
நினைவுகளைக்
கனமாகச் சுமந்து கொண்டிருக்கும்
இளைஞர்களெல்லாம்....!

ஓ.....!
சொர்க்கத்திற்கு
விடுமுறை போலும்.



# பொறாமை

நம்மை
ஒருவருக்கு
அறிமுகம் செய்து வைக்கக்கூட
மனது வராத இவர்கள்.....!

புரிகிறது......!

இவர்கள்
பொறாமைக் காரர்கள்.



# காதல்

நீ
கூப்பிடும் பொழுது மட்டும்
ஏன்.......
என் பெயர்....
இத்தனை அழகாய்...
இதயம் வரை கேட்கிறது.

# பொங்கலோ பொங்கல்



உழவர் திருநாள்
இங்கே....!
உற்சாகமாகக் கொண்டாடுகிறார்கள்
அங்கே.......!
உழுவதற்கு நிலமில்லாத போது
உழவர் திருநாள்
எமக்கெதற்கு...?

# ஆத்திரப் படுவதா?



குணங்களைப் பார்க்காமல்
பணங்களின்
பக்கம் சாய்ந்து
ஆலவட்டம் பிடிக்கும்
இந்த
மனித சமுதாயத்தின் மேல்

தவறுகளைத் தானாக உணராத
தரித்திர மூளைகளின் மேல்

ஆத்திரப் படுவதா?

அனுதாபப் படுவதா?



# யார்...?
# இவர்கள்...?

ஆடம்பரமாய் செய்யும் சடங்குகள்
அறியாமையால் செய்யும் விளம்பரங்கள்!

சில சின்னப் பறவைகள்
உயரப் பறப்பதாய் எண்ணி சிறகோடிக்கின்றன.

ஈசல்களுக்குச் சாயம் பூசி
வண்ணத்துப் பூச்சிகளாய்
வளர்த்து விட முடியாது!

# புகழ்ச்சிக் கண்ணிகள்.



சிலர்
பொழுது போக்காய்
உலா வருவதுகூட
இங்கே
பொதுச்சேவையென்று
பெயர் பெற்றிருக்கிறது!

# அஞ்சாமல் என் வழியில்



நான்
ஒருவருடனும்
ஒட்டிக் கொள்ள விரும்புவதில்லை.
தட்டிச் செல்பவர்க்கு
தண்டனை கொடுக்கின்றேன்.
எல்லோரும் தங்களை உலகுக்கு
காட்டத் துடிக்கிறார்கள்.
நானோ உலகத்தின் கண்களிலிருந்து
மறைந்தே வாழ்கிறேன்.
தமிழனையே கண்களாய் ஆக்கும்
தரங் கெட்ட மனிதருக்கு
தண்டனையே கொடுக்கின்றேன்.



# எனக்கு வந்த வாழ்த்து

எழுத்தாணியிது !

எழுச்சியின் செம்புகோல்

எழுதுங்கள் எண்ணங்களை

ஏடுகளில் மட்டுமல்ல

எரிந்திடும் நெஞ்சங்களில்.

# காவத்தன் கேள்விகள்??



கண்ணுக்குள் விழுந்த
தூசுக்கு மட்டுமல்ல;
காலில் தைத்த முள்ளுக்கும்
கண்கள் தானே
கண்ணீர் சிந்துகின்றன.



# எனக்கா தெரியாது?



அவர்
உங்களை தூக்கி வைப்பதாய்
கனவு காணுகிறீர்கள்,
உயரத்திலிருந்து
உருட்டி விடத்தான்
உயர்த்தியுள்ளார் உங்களை.

நீங்கள்
விழுவதை வேடிக்கை பார்க்க
ஒரு கூட்டமே
காத்திருக்கிறது.

# துப்பாக்கி வேண்டாமா?



சொந்தமாக
சிந்தனை முனைப்பு உடையவனை
"துடுக்குக்காரன்" என்கிறீர்கள்
"கோபக்காரன்" என்கிறீர்கள்
கோபம்கூட சமூக நேசத்தின்
இன்னொரு வடிவம் என்பதை
புரிந்து கொள்ள
ஏன் மறுக்கிறீர்கள்?



# வில்லன் வித்தாரம்

எந்திரங்களைக் கூட
மனிதர்களாக மாற்றிவரும்
இந்த நாட்டில் – வாழும்
நம் மனிதர்களோ...!..!
வேதனையாயிருக்கிறது!

## தம்பி
## உனக்குத்தான்



தம்பி
பெர்லினுக்கு
வந்தவுடனேயே
உன் தலைக்கு
பித்தமேறிவிட்டது போல
சிறு பிள்ளை
கனவுகளில் மூழ்கிச்
சிதைந்து போகாதே!

# என் மௌனம்



நெஞ்சக் கதவை
மூடிவிட்டு
வாசற் கதவைத் திறந்து உங்களால்
எப்படி வரவேற்க முடிகிறது.

என் தொடுவானம்
நீங்கள் தொடமுடியாத
தூரத்தில் இருக்கிறது.

ஒரு ஞானியைப் போல்
மௌனமாய் இருக்கிறேன்

என் மௌனத்தைக்
கலைக்க முயலாதீர்கள்!



# சுருங்கப் போகும் சமூகம்

அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றினை தயாரித்து வழங்கிய சோவியத் எழுத்தாளர் விற்றலியேவ் [vitaly vitaliave] பல நாடுகளுக்குத் தான் பயணம் செய்திருப்பதாகவும், ஆனால் இவ்விடத்தில் மட்டுமே நாய்களுக்கும் [Tie] ஆண்களுக் கும் இடையேயுள்ள நெருக்கமான உறவைக் காணக்கூடியதாக உள்ளது எனவும் அவர் கூறினார்.

உண்மையில் ஆங்கிலேயரைப் பார்க்க எம்மவரே நாய்கள் மீது அதிக ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனர்.

இன்று நாய்கள் இல்லாத தமிழர்கள் சமூகம் தரும் நிகழ்ச்சிகள் மிகவும் அரிதானவையே.

நன்றி "கதிர்"

# குறுக்கீடு



பாதை மாறிய பக்தியும்
பழகிப் போன ஆவியும்

பிரார்த்தனை செய்தால்
வரசித்தியாகிறதாம்.

சுத்தம் சோறு போடாததால்
அசுத்தப் பட்டார்கள் ஆதாரம் கிடைக்கிறது.

கொடுக்கல் வாங்கல்தான்
கொள்கையாயிருக்கிறது.

ஊழல் பரம்பொருளாய்
உலகெங்கும் நிலைக்கிறது.

காசு தந்தால் கடவுளுடன்
கலந்துரையாடல் நடக்கிறது.

ஆசைப்பட்ட பொருள் யாவும்
ஆண்டவன் பெயரால் கிடைக்கிறது.

# புகழ்



புகழே!
நீ இமயத்தின் உச்சி
இடைவிடா முயற்சியால்
உன்னைச் சிலர் பிடித்துவிடுவார்கள்.

புகழே!
நீ ஒரு புதிர்
உன்னைப் பற்றி
விளக்கவே
என்னால் முடியாது!

# சட்டை உரிக்கும் பாம்புகள்.



எத்தனை
அழைப்பிதழ்கள்
அத்தனையும் .....!

தங்கள்
பிம்பங்களை
பெரிதாகக் காட்டிக்கொள்ள
எடுக்கும் முயற்சிகள்.

குறிப்பு:—
முதற்பதிப்பு பிரதிகள்
தீர்ந்துவிட்டதால் இது
இரண்டாம் பதிப்பாக
வெளிவருகிறது.

ஆதரவுக்கு நன்றி.



# போலிகள்

பீரங்கி பற்றியெல்லாம்
பீற்றிக் கொள்கிறார்கள்
ஒரு
பிரம்படி கூடப்
படாதவர்கள்.

எங்கள்
கண்ணீர் துடைக்க
வராத கைக்குட்டை
பன்னீர் துடைக்க
பரபரக்கிறது.

# காதலுக்காக!



"உன் இதயத்தின்
மையத்தை நோக்கி
ஒரு பயணம்"

அன்பே,
நீ.....!
என் காதலை
ஏற்காவிடினும் பரவாயில்லை,

உன்
தோழியிடமாவது
என்னை
அறிமுகப்படுத்தி விடு.



தொடர்புகட்கு:-
M. GOWRITHAS
oberlandgarten-16
1000 BerLin 42.
T.P. 6252017